
உ



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

திருமதி. வயிரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அன்னமலர்

17-06-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

# அமரர்

# திருமதி வயிரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அன்னை மலர்


## திதி வெண்பா

சீருறு சித்திரபானு ஆண்டின் வைகாசி ஞாயிறு தன்னில்
சீருறும் வித்தகத் திருதியை திதியினிலே ~ பத்தினியாம்
சீருறு வயிரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா நண்ணியே
சீருறு சிவன்பாதம் சேர்ந்திட்ட நாளே.

17.06.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையாரை (பருத்தியடைப்பு)
குலதெய்வமாகக் கொண்ட
**திருமதி வயிரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா**
எம்மையெல்லாம் அன்புடன்
அரவணைத்து வளர்த்து, இந்நிலைக்கு
உயர்த்திய அன்னை,
உற்றார் உறவினர்களுடன் இன்முகம் காட்டி,
இல்வாழ்க்கையில் சிறந்தோங்கி
விருந்தோம்பலில் தன்னிகரற்ற பண்பும்,
பாசமும் நிறைந்த பேரொளியாய்
வாழ்ந்து அன்புடன் எம்மைப் பேணி வளர்த்த
எம் அன்னை இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட தாயின் பொன்னடிகளுக்குக்
காணிக்கையாக
இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

"குமரஸ்தான்"
இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மலர்



அமரர்

வயிரமுத்து சங்கரப்பிள்ளை அன்னம்மா

அன்னை மடியில்
01.05.1912

ஆண்டவன் அடியில்
18.05.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இணுவில் மேற்கு வாசி

## அமரர் திருமதி. சங்கரப்பிள்ளை அன்னம்மா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சிவபூமி எனத் திருமந்திரம் தந்த திருமூல நாயனாராம் சித்தரால் புகழப்பட்ட இலங்கையின் சிவநெறி மையமாக விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பண்டு தொட்டுப் பல்கலைச் சிறப்பும் பண்டபாடும் பக்தியும் சிறந்து விளங்கும் இணுவிற் கிராமத்தின் மேலைப் பகுதியில் வாழும் சிவத்தமிழ் குடியொன்றில் கார்த்திகேசு எனும் தந்தைக்கும் செல்லம்மா எனும் தாய்க்கும் மூன்றாவது மகளாக 1 — 5 — 1912ல் உதித்த்வர் அமரர் திருமதி. சங்கரப்பிள்ளை அன்னம்மா அவர்கள்.

இவர் தம் கல்வியை இணுவில் அ.மி.த.க. பாடசாலையில் கற்று வளர்ந்து மணப்பருவம் எய்தியவேளை இவ்வூரைச் சேர்ந்தவரும் வைரமுத்து இராசம்மா தம்பதிகளின் மைந்தருமான திரு. சங்கரப்பிள்ளை (அமரர்) அவர்களைப் பெரியோர் மணம் பேசி மணம் முடித்து வைத்தனர்.

இவர் தம் அண்ணன் கந்தையா, அக்காள் கனகம்மா, தங்கை யோகம்மா, பெற்றோர்கள், உறவினர்கள், அயலவர்கள் மகிழ்ந்து போற்றும்படி மாண்புற இல்லறம் ஓம்பி இணுவை செகராச சேகர விநாயகனை அனுதினமும் வழிபட்டு வந்தார்.

இவர் இனிய இல்லறத்தின் நற்பேறுகளாக கணேசரத்தினம், அரியராசா, செல்வராசா, மகேஸ்வரன் எனும் புத்திரர்களும், இராசமணி, புஷ்பலீலாவதி, சிவயோகமணி எனும் புத்திரியரும் வாய்க்கப் பெற்றார்.

இவர்களுள் மகன்மாரில் கணேசரத்தினம் என்பவர்க்குப் பொன்னம்மா எனும் மங்கை நல்லாளையும், அரியராசா (லண்டன்) என்பவருக்கு புவனேஸ்வரி (B.A) எனும் ஆசிரியையும், செல்வராசா (உதவி அரசாங்க அதிபர், சண்டிலிப்பாய்) என்பவருக்கு கௌசலாதேவி எனும் குலக்கொடியையும், மகேஸ்வரன் (சுவிஸ்) என்பவருக்குப் பரமேஸ்வரி எனும் மாதாசிரியையும், மகள்மாரில் இராசமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவருக்கு (அமரர்) சி. தர்மலிங்கம் ஆசிரியனையும், புஷ்பலீலாவதி என்பவருக்கு அமரர் சண்முகநாதன் அவர்களையும், சிவயோகமணி என்பவருக்கு மல்லாகம் நீதிமன்ற முதலியார் (Interpritor) திரு. தெட்சணாமூர்த்தி அவர்களையும் நல்மணம் முடித்து வைத்துப் பெருமை பெறற்றார்.

தம் மக்கள் நடாத்திய சால்புமிகும் இல்லறத் தவப்பேறுகளாக தமது பேரப் பிள்ளைகளாக சிவகுமாரன் ஆசிரியர், அமரர். ஜெயக்குமார், செல்வக்குமார் (ஜேர்மனி) குகதாசன் (கனடா) கண்ணதாசன் (அவுஸ்ரேலியா) சங்கரதாசன் (அவுஸ்ரேலியா) சண்முகதாசன் (நியூசிலாந்து) ஜெயந்தன் (இலண்டன்) செந்தூரன், நிரஞ்சலா (கனடா) துஷ்யந்தி, சத்தியவரதன் (சுவிஸ்) அருள்வரதன், சத்தியச் செல்வி, ஜெனனி (சுவிஸ்) ஆகியோர்ரைப் பெற்று பெருவாழ்வு பெற்றார்.

இவர் தம் இறுதிக்காலத்தில் தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இணுவில் மேற்கிலிருக்கும் குமரஸ்தான் எனும் அவரது மனையில் மக்களாலும், பேரப்பிள்ளைகளாலும் அன்பான பராமரிப்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்து கொண்டு தினமும் அண்மையிலுள்ள பருத்தி அடைப்பு செகராசசேகர விநாயகப் பெருமானை மெய்ன்போடு சென்று வழிபட்டு வந்து தமது 91வது அகவையில் நிம்மதியாக நிறைந்த மனத்தோடு நிமலன் அடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்ம சாந்தியடையவும், அவர் கும்பத்தவர் மனச்சாந்தி பெறவும் எல்லாம் வல்ல செகராசசேகரப் பிள்ளையார் திருவடி இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

இணுவில் மேற்கு,<br>இணுவில்.

உறவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸீத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டியல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டெனில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மாமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்
காட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருளை வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் என்னையாள்சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடிஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கி பிணம் என்று பேரிட்டுச்
சூரையங் காட்டை கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

## பட்டினத்தார் பாடல்கள்

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீரும் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங் கச்சியே கம்பனே.

புத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடித்த பின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிச்சாகும் பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண கயிலாபுரிக் காளத்தியே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோயில்
## திருவூஞ்சல்



**இணுவையம்பதியில் கோயில் கொண்டு எம்மையெல்லாம் வாழ்விக்கின்ற ஆறுமுகன் தேரேறி அருளாட்சி புரிந்து இருப்பிடமேகி பச்சை சாத்தி இளைப்பாறு மண்டபத்தில் திருவூஞ்சலில் வீற்றிருக்கும் போது பாடும் திருவூஞ்சல் பாமாலை**

## இணுவில் ஸ்ரீ கல்யாண வேலவர் திருவூசல்

### காப்பு

சீரேறு மீழவள நாட்டி னோர்சார்
திகழ்கின்ற யாழ்ப்பாண தேச மேவும்
காரேறு பொழி லிணுவை நகரில் வாழும்
கல்யாண வேலவர்மே லூசல் பாடப்
பாரேறு பரராச சேகரப்போர்ப்
பார்த்திபர் கோ னன்னதிற் றாபித் தேத்தும்
பேரேறு விநாயகமுக் கண்ணன் பாதம்
பேரன்பு கொண்டு நிதம் வாழ்த்துவோமே.

திருவளரு மெழின் மருமச் செங்கள் மாலுஞ்
செம்பதும மலரோனுந் தேடிக் காணா
அருவுருவாஞ் சதாசிவன்றன் கருணையாகி
யவதரித்துக் திருமுகமோ ராறுகொண்ட
வரமருவு கல்யாண வேலர் மீது
வாஞ்சைபெறு முஞ்சலிசை யினிதுபாட
கரமருவு மஞ்சுசபா சத்த னான
கணபதித னிருசரணங் கருத்துள் வைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாந் நாதவிந்து தூண்க ளாகக்
கருதரிய குடிலையது விட்ட மாக
பூரணமா கியகலைகள் கயிற தாகப்
பொற்புறுநற் சிவாகமங்கள் பலகையாக
ஏரணங்கொள் சதாசிவமாம் பீடமீதில்
ஏனபர சிவசோதி யென்ன வந்து
சாரணவு சோலைநெறி யிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்

செக்கர் வெயில் பயில்பவளர் தூண்கள் நாட்டி
சிறந்தவொளி பொழிவயிர விட்டம் பூட்டி
தொக்கதங்கப் புரிபுனைந்த கயிறு மாட்டி
துலங்குசெழும் புதுமலர்ப் பலகை சேர்த்தி
மிக்கமுத்தின் பந்தரிட்டு விதானம் போக்கி
வெண்கவரி புனைந்ததிரு வூசல்மீது
கைக்களிற்றி னொருதுணையா யிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.

திருவிளக்கு நதியாட மதியு மாடச்
செஞ்சடைக்கா டாடமுக னைந்து மாட
மருவிளங்கு தொடையாட வளக மாட
மங்கைசிவ காமிமன மகிழ்ச்சி யாட
அருள்விளங்கு பதஞ்சலியும் புலியுமாட
வம்பலத்தே நடம்புரியு மெம்பிரான் றன்
கருணை தங்கு பாலகரே யிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.

அருள்பொழியுந் திருமுகங்க ளாறு மாட
வாறிரண்டு திருக்கரமா மலர்க ளாட
மருள்பொழியும் மலஞ்சீக்கும் வடிவே லாட
மங்கைதெற்வ யானைவள்ளி மகிழ்ந்தே யாட
பொருள்பொழிசெங் கனககுண்ட லங்க ளாட
புண்டரிக சரணமல ரிரண்டு மாட
கருணைபொழி கணபதிசே ரிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரைகொழு நனும்சுதனும் வடந்தொட் டாட்ட
விமையவரு மிந்திரனுங் கவரி வீச
சந்திரனு மாதவனுங் கவிகை தாங்க
தனதன்முத லோரால் வட்டம் வீச
முந்துதவத் தினர்வேத கீதம் பாட
முத்தநகை வள்ளிதெய்வ யானையோடு
கந்தமலர்ப் பொழிலிணுவை வாழ்வு செய்யும்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.

திங்களணி மணிமகுட மிருள்கால் சீப்பத்
தேவர்சொரி மலர்மாரி திசைக டூர்ப்ப
மங்களமார் முரசாதி யியங்க ளார்ப்ப
மறையவர்செய் வேதவொலி வானம் போர்ப்ப
பங்கமிலா வள்ளிதெய்வ யானை யென்னும்
பத்தினிக ளிருவோரும் பாங்கர் மேவக்
கங்கைதரு பாலகரே யிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.

வாரணனோ டமர்களைப் பெரிதும் வாட்டி
வருத்தமிகப் பிரிந்தசூர் முதலை வீட்டி
ஏரனவும் பொன்னுலகங் கவர்க்கு நாட்டி
யேத்துவோர்க் கிடர்களெல்லாந் தீர வோட்டி
நாரணனு நாடரிய பாதங் காட்டி
நாயேனை யாளாக நயந்து கொண்ட
காரணனே மறையவர்வா ழிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.

தடமதில்கோ புரங்கோயில் சமைப்போர் வாழத்
தாங்குநிழற் றருக்கள்பல தொகுப்போர் வாழக்
கடமைபசு வாதியநீ ரருந்த நாளுங்
காவலுறு கேணிகுளம் தொடுவோர் வாழப்
படவரவு புனைபரம னடியார்க் கென்றும்
பாங்குபெற திருவமுது கொடுப்போர் வாழக்
கடமுனிபே ரறிஞர்செறி யிணுவை மேவுங்
கல்யாண வேலவரே யாடீ ரூசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரந்தரனு மிமையவரும் பொருமல் நீங்கப்
பூங்கமலத் தயனொடுமால் புவனந் தாங்க
வரந்தருசீர் நுதற்ணிகளை வந்து தோன்றி
வயங்கு மழற் பொறியாறாய் விழமந்தீர்க்க
சரந்திகழுஞ் சரவணப்பூம் பொய்கை மீது
சார்வுறுமோர் சிறுகுழவி வடிவே யாகிக்
கரந்தயனு மறிவரிதா யிணுவை வாழுங்
கல்யாண வேலவரே யாட ரூசல்.

## வாழி

அந்தணர்கள் வாழிபசு நிரைகள் வாழி
யரசரொடு வசியர்பின் னோர்கள் வாழி
சந்ததமும் முகில்மழை பொழிநீர் வாழி
தகுதிபெறு மகளிர்பதி விரதம் வாழி
முந்துமெழுத் தைந்தொடுகண் டிகையும் வாழி
முதன்மைபெறு சிவநாமம் நீறும் வாழி
செந்திருவா ழிணுவையினிற் கோயில் கொண்ட
சிவசுப் பிரமணிய ரருளும் வாழி.

## முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி , சைவப்புலவர், சங்கீத கலாவித்தகர்
வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள்
இயற்றியருளிய

# இணுவைக் கல்யாண வேலவர் லாலி பராக்கு மங்களம்

## லாலி சுப லாலி

ஏறுமயில் வாகனனே லாலி சுபலாலி
இணுவை வளர்வேலவனே லாலி சுபலாலி
ஆறுமுக வேலவனே லாலி சுபலாலி
ஆறுபடை வீடுடையாய் லாலி சுபலாலி
வீறுபொலி வேலுடையாய் லாலி சுபலாலி
விண்ணவர்கள் நாயகனே லாலி சுபலாலி
நீறுபொலி வடிவழகா லாலி சுபலாலி
நிர்மலனே சிவகுருவே லாலி சுபலாலி.

## பராக்கு

ஆறுமுகனே சிவசுதனே குகனே பராக்கு
ஆறுமுக வேலவனே குருவே பராக்கு
இணுவைநகர் உறைபவனே குகனே பராக்கு
ஈசனுமை பாலகனே குருவே பராக்கு
ஒளிவடிவே சிவகுருவே குகனே பராக்கு
ஓங்கார தத்துவனே குருவே பராக்கு
எழுதரிய வடிவழகா குகனே பராக்கு
ஏழிசையாய் இணுவைவளர் குருவே பராக்கு.

## மங்களம்

இணுவைவளர் வேலவர்க்கு ஜெயமங்களம்
ஈசனுமை பாலகர்க்குச் சுபமங்களம்
தணிகைவளர் முருகனுக்கு ஜெயமங்களம்
சண்முக குமாரனுக்குச் சுபமங்களம்
மணிமுடிசேராறு முகற்கு ஜெயமங்களம்
வள்ளிதெய்வ யானைமங்கை சுபமங்களம்
அணிமயில்சேர் அறுமுகர்க்கு ஜெயமங்களம்
ஆறுமுக வேலவர்க்கு சுபமங்களம்.

**ஓம்சரவணபவ**
**மங்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையம்பதி முருகன் மகோற்சவத்தின் போது நடைபெறுகின்ற வேட்டைத் திருவிழாவின்போது வள்ளியை திருமணம் செய்து ஏகும்போது தெய்வானையால் கதவு அடைக்கப்படுகின்றது. அக்கதவை திறக்கும்படிய எட்டகுடி வேலவர் ஏசல் பாடப்படுகின்றது.

## எட்டிகுடி வேலவர் ஏசல்

### வெண்பா

மாசின்முரு கேசருக்கும் மாதுதெய்வ யானைக்கும்
ஏசல் நேரிட்ட தியம்பவே - காசினியிற்
செஞ்சடிவ நின்ற திகழ்யானை மாமுகத்தோன்
கஞ்ச மலர்த் தாளினையே காப்பு. (1)

காசினி யோப்புழகள் எட்டிகுடி வேலவர்
கதைவைத் திறக்கும் ஏசல்பாட - எழில்
கதவைத் திறக்கும் ஏசல்பாட (2)

மூஷிக வாகன மீதேறும் விநாயகன்
முளரி மலரடியே காப்பு - எழில்
முளரி மலரடியே காப்பு (3)

### நூல்

செய்வடி வேலேற்றும் முருகர் வருகிற
செய்தியறிந்தாள் அந்தமாது - தெய்வ
யானையறிந்தாள் அந்தப் போது (1)

பரிவுடன் வடிவேலா முருகர் வரவுணர்ந்த
படக் கென்றடைந்தாள் அப்போது - கதவைச்
சடக் கென்றடைத்தாள் இப்போது (2)

அடைத்த காரணம் தெரியாமலே முருகேசர்
ஆசையினால் மதிமயங்கியே - அவள்
ஆசையினால் மதிமயங்கியே (3)

தடதட வெனவுள்ளே இணுவையிலே வந்து
தட்டினார் கையினுல் தானே கதவை
தட்டினார் கையினுல் தானே (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்பகவதிசகி கதவைத் தட்டியே தட்டித்
திறவென்று சொன்னவ ராரோ ~ இந்தத்
தெருவில் வந்தவ ராரோ (5)

எந்தன் கண்மணியேநீ அறிவாயோ வந்தேன்
எட்டிகுடி வேலவர் நானே ~ பெண்ணே
எட்டிகுடி வேலவர் நானே. (6)

எட்டிக்குடியை விட்டு விரைவினில் இரவிலே
எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி ~ நீரே
எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி (7)

மாதேறின் முகமதி ஒளியைக் கண்டின்புற
மாதரசே இந்தவேளை ~ எழில்
மாதரசே இந்தவேளை (8)

இந்தவேளை இரு காதவழி நடந்து
எவ்விதம் வந்தீர் சொல்லும் சுவாமி ~ இங்கே
எவ்விதம் வந்தீர் சொல்லும் சுவாமி (9)

கட்டழகியே உன்னை மனத்தில் நினைத்தபோதே
காதவழியும் இரு நாழியே ~ இரு
காதவழியும் இரு நாழியே (10)

அரைநாழி என்னைவிட்டு பிரியாளே அந்தவள்ளி
அறியாமல் ஓடி வந்தீரோ ~ சுவாமி
தெரியாமல் ஓடி வந்தீரோ (11)

அந்த வள்ளியைவிட்டு உந்தன் முகத்தைக் காண
ஆசை கொண்டு காண வந்தேன் ~ பெண்ணே
ஆசை கொண்டு காண வந்தேன் (12)

காண வந்ததிலென்ன ஆயிரமாகவே
கைப்பொருள் கொண்டு வந்தீரோ ~ சுவாமி
காணிக்கை கொண்டு வந்தீரோ (13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென் நதையெல்லாம் ஈண்டுநான் தருகின்றேன்
விரைவுடனே சொல்லுவாயே ~ பெண்ணே
விரைவுடனே சொல்லுவாயே (14)

சொல்ல வருவதில்லை உமது பொருளும் வேண்டாம்
துரிதத்தில் போவாய் நேயாள்வீடே ~ சுவாமி
துரிதத்தில் போவாய் நேயாள்வீடே (15)

நேயமில்லாதவள் போல நீபேசுகின்றாய்
நித்திரை மயக்கமோ பெண்ணே ~ உனக்கு
நித்திரை மயக்கமோ பெண்ணே (16)

நித்திரை தனை விட்டு நீர் வருவீரென்று
நினைத்திருப் பாளே வள்ளி போம் போம் ~ உனக்கு
நினைத்திருப் பாளே வள்ளி போம் போம் (17)

போமென்று நீர்சொல்ல நியாயமில்லவே நாம்
போனாலென்ன கெட்டுப் போகும் ~ பெண்ணே
போனாலென்ன கெட்டுப் போகும் (18)

கெட்டுப் போகாதந்தச் சட்டக் கல்விகளெல்லாம்
கேட்பவரார் சொல்லும் சுவாமி ~ இங்றாக்
கேட்பவரார் சொல்லும் சுவாமி (19)

கேட்கச் சொல்லி உன்னை யாரடிக்கின்றாரிங்கே
கேவலம் எனையிக ழாதே ~ பெண்ணே
கேவலம் எனையிக ழாதே (20)

இகழவும் புகழவு மென்னாலாகா தந்த
இனிய வள்ளிக்கே யொக்கும் தானே ~ சுவாமி
இனிய வள்ளிக்கே ஒக்கும் தானே (21)

ஒக்கவென அணைத்தால் என்னையினிப் பிரியேன்
உறுதி சொன்னேன் உலகறியவே ~ பெண்ணே
உறுதி சொன்னேன் உலகறியவே (22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிலம் புகழ்வடிவே லேந்து முருகரே
வார்த்தை பழக்க வந்தீரோ ~ சுவாமி
வார்த்தை பழக்க வந்தீரோ (23)

வார்த்தை பழக்கிட நான் வல்லவனல்லனுன்
மனதினிற் கோபஞ் செய்யாதே ~ பெண்ணே
மனதினிற் கோபஞ் செய்யாதே (24)

போதும் போதும் இந்த உபசார வார்த்தைகள்
போதிக்க வந்தீரோ சுவாமி ~ இங்கே
போதிக்க வந்தீரோ சுவாமி (25)

கண்ணியே யுன்மனம் இரங்காத தென்னிரு
கால்களும் நோவுதடி கண்ணே ~ எந்தன்
கால்களும் நோவுதடி பெண்ணே (26)

முள்ளு திமியடி முனைமேலே நிற்பாருக்கும்
முந்திக்கால் வலிக்குமோ சுவாமி ~ நல்ல
தந்திர வித்தைதான் சுவாமி (27)

மரகதமே நல்ல குயிலே நீ
வந்து கதவு திறப்பாயே ~ பெண்ணே
நொந்து மனதிருக்காதே (28)

கதவு திறக்க எனப் பதனமாய்ப் பேசுகிறீர்
கைப்பொருள் கொண்டு வந்தீரோ ~ சுவாமி
செப்படி வித்தைகள் தானோ (29)

குன்றக் குடியினில் அன்று காணிக்கை வைத்த
கொலுசுகள் இருக்குவ தருகிறேன் ~ பெண்ணே
கொலுசுகள் இருக்குவ தருகிறேன் (30)

பஞ்சணையில் வள்ளியைக் கொஞ்சிக் குலாவியவள்
பாதத்தில் அணிந்து நீர் பாரும் ~ நல்ல
சோதிப் பிரபை அதுவாகும் (31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பூச நன்னாளிற் காணிக்கை யாகத்தந்த
தண்டைகளுண்டவை தருகிறேன் - பெண்ணே
கொண்டு கழிமகிர் காடரே (32)

வைத்த காதல் வள்ளி மகிழ மருவி நீரே
வைத்டதவள் காலினிற் பாரும் - அவள்
சித்தம் மகிழ்ந்திடச் சேரும் (33)

சித்திரா பூரணையிற் சேர்த்து வைத்திருக்கின்ற
செவ்வற்தி மாலைகள் தருகிறேன் - பெண்ணே
சினந்தணிந் தென்னுடன் சேரும் (34)

இந்திரலோகத்து வெள்ளையானை வந்திருக்கின்ற(து)
இதனைக் கண்ணால் உற்றுப்பாரும் - எந்தன்
மனதுப் புண்ணைச் சற்றே தீரும் (36)

கண்ணினுற் பார்ப்பதென் பெண்ணாய் வளர்த்தென்னை
காத்துக் கொடுத்ததும் கையில் - சுவாமி
நீத்தெமைப் பிரியவோ கூறும் (37)

இந்தக் கதவினைத் திறந்திடின் நானும்மைத்
இருக்கின்ற தென்னிடம் பாரும் - பெண்ணே
சிரித்திடக் காட்டுவேன் பாரும் (38)

தட்டிக் கதவினைத் திறந்திடின் நானும்மைத்
தழுவி யணைகுவேன் சுவாமி - உம்மைக்
கெழுமி அணைகுவேன் பாரும் (39)

ஐந்துடன் ஆறெழுத்துந்தியே தட்டிட
அக்கணந் திறந்து தாழும் - சிந்தை
நெக்கணைந்தாள் யானை மாதும் (40)

தொல்லை முராரிபால் தோன்றிய இருவேமும்
பன்னெடுங் காலம் பிரிந்தோம் - சுவாமி
எல்லையில் காலம் மறந்தோம் (41)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லையிற் கூட்டியே உடனுறைவித்தீர் செய்ய
வல்ல கைம் மாறுண்டோ சுவாமி ~ உன்றன்
எல்லையில் கருணையே சுவாமி (42)

அம்மையும் யானுன்றன் இளையவளாயினேன்
இம்மையும் இளையவள் ஆனேன் ~ என்னை
அம்மையே அளித்தருளாயே (43)

இந்திரன் மாதுடன் எயினர் மாதும் இன்னே
சிந்தையும் உயிரு மென்றார் ~ நறுங்
கந்தமும் மலரும் போலானார் (44)

வானமும் வையமும் வாழிய கந்தன் தெய்வ
யானையை வள்ளியோடணைத்தார் ~ மகிழ்
தேவர்கள் பூமழை சொரிந்தார் (45)

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்களை வளர்த்து நன்னிலைக்கு வருவதற்கு
வித்திட்ட எங்கள் அம்மா என்னும்
அன்புத் தெய்வம் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த
வேளையில் எமக்கு
உதவிபுரிந்து, ஈமைக் கிரிகைகளில் பங்குகொண்ட
உற்றார், உறவினர், நண்பர்கள்,
அயலவர்கள் அனைவர்க்கும், அனுதாப செய்தி
அனுப்பியவர்களுக்கும், எமது அழைப்பை ஏற்று
அன்னாரின் இறுதிக் கிரிகைகளிலும்,
மதிய போசனத்திலும்
கலந்து சிறப்பித்தவர்களுக்கும் எங்கள் இதயம்
கலந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

"குமரஸ்தான்"
இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

- வயிரமுத்து
  - ஆச்சிமுத்து
  - சின்னத்துரை
  - சங்கரப்பிள்ளை
    - இராசமணி + தர்மலிங்கம் (அமரர்)
      - சிவகுமார் + நளாயினி
        - ஜெயராம்
        - ஹர்ஜன்
        - அரிகரன்
        - கோகுலராம்
      - ஜெயகுமார் (அமரர்)
      - செல்வகுமார் + சாந்தினி
        - செல்வண்யா
    - கணேசரத்தினம் + பொன்மணி
      - குகதாசன் + பிறேமராணி
        - திஷ்யஆரபி
        - குகேசன்
        - பிரணவி
      - கண்ணதாசன் + ஜெயந்தி
      - சங்கரதாசன் + ரோகிணி
      - சண்முகதாசன் + சர்மிளா
    - புஸ்பலீலாவதி + சண்முகநாதன் (அமரர்)
      - ச
    - அரியராச + புவனேஸ்வரி
      - ஜெயந்த

## சாவழி

கார்த்திகேசு

↓

கந்தையா    கனகம்மா    அன்னம்மா    யோகம்மா

↓

ராசா    செல்வராசா    மகேஸ்வரன்    சிவயோகமணி

\+    \+    \+

ரி (அமரர்)    கௌசலாதேவி    பரமேஸ்வரி    தட்சணாமூர்த்தி

↓

ந்தன்    ஜனனி

↓

சத்தியவரதன்    சத்தியச்செல்வி    அருள்வரதன்

\+    \+    \+

அரசி    ரவீந்திரநாதன்    விஜயலட்சுமி

↓    ↓    ↓

கஸ்தூரி    ரஜிதன்    கஜன்ராஜ்

ரஜீவன்

ரஜிப்பிரியன்

சன்

ா

↓

நிரஞ்சலா    துஷ்யந்தி    செந்தூர்

\+

ஆனந்தராசா

↓

அர்ச்சுவினியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org